# யா / தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

## தாவடி, கொக்குவில்




# பரிசளிப்பு விழா - 2011

# PRIZE GIVING - 2011

**அதிபர் அறிக்கை**

**PRINCIPAL'S REPORT**

**23.11.2011**

**School Main Hall**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/தாவடி இந்து தமிழ்க் கலவன்
# பாடசாலை
## தாவடி கொக்குவில்

**மகுட வாசகம்**

"உயர் நெறி வழி உய்மின்"

## தூரநோக்கு - VISION

நற்பண்புகளைக் கொண்ட உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குவோம்.

## நோக்கக்கூற்று – MISSION

சிறந்த கல்வி ஊடாக நற்பண்புகள் சமய ஒழுக்கங்கள்,விழுமியங்கள்,பொருளாதார மேம்பாடு என்பவற்றை உயர்த்துவதன் மூலம் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்க நாம் எல்லோரும் பங்காற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| மங்கள விளக்கேற்றல் | | |
| தேவாரம் | | |
| தமிழ்த்தாய் வாழ்த்து | | |
| வரவேற்புரை | :- | திருமதி.வ.செல்வரஞ்சன் (உபஅதிபர்) |
| | | செல்வி.த.கோஜிகா (தரம் 11 மாணவி) |
| ஆசியுரை | :- | சிவஸ்ரீ.சிவசங்கரக்குருக்கள் |
| தலைமையுரை | :- | திரு.நா.சிவனேசன் (அதிபர்) |
| சிறப்பு விருந்தினர்கள் உரை | | |
| பிரதம விருந்தினர் உரை | :- | திரு.S.ரமேஸ் (சிரேஷ்ட விரிவுரையாளர்) |
| பரிசில் வழங்கல் | :- | திருமதி.நி.ரமேஸ் |
| நன்றியுரை செல்வி | :- | மா.மகாலட்சுமி. (ஆசிரியர்) |
| கலைநிகழ்வுகள் | | |
| பாடசாலைக் கீதம் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்



**திரு. நா. சிவநேசன்**

M.Ed,B.A,Dip.in.Ed(Merit),SLPS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப அதிபர்



**திருமதி. வ. செல்வறஞ்சன்**

(Eng.Trd)

**பகுதித் தலைவர்**



**திருமதி. இ. பாலச்சந்திரன்**

B.A,Dip.in.Ed,SLTS-1

**ஆரம்ப பகுதித்தலைவர்**



**திருமதி. பா. பாலகுமாரன்**

B.A,Dip.in.Ed,(Merit)SLTS-2-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாடசாலையின் ஆளணியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2010 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழா



2010 ஆம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலையின் ஆரம்பப் பிரிவு



கேட்போர் கூடமும் நூல்நிலையமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
# பரிசளிப்பு விழா - 2011 அதிபர் அறிக்கை

எமது பாடசாலை 1875 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 136 வருட காலத்தை நிறைவுசெய்துள்ளது. இக்காலத்தில் கிடைக்கப்பெற்ற வளங்களோடு இயங்கி அரிய சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி வளர்ச்சி அடைந்துவருகின்றது. எமது பாடசாலை ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும் உங்கள் அனைவரது ஒத்துழைப்பினாலும் உதவிகளாலும் சிறந்த கற்றல், இணைபாடவிதானப் பெறுபேறுகளைப் பெற்றுவருகின்றது. 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சா/த. பரீட்சையில் 15 மாணவர்கள் க.பொ.த. (உ/த) க்கு தகுதி பெற்று தற்பொழுது க.பொ.த. உயர் தரம் கற்றுவருகின்றார்கள். சித்தியடைந்த இம் மாணவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள். 2010 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 25% மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். 50% மாணவர்கள் 70 புள்ளிகளுக்க மேல் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் இன்று பரிசில் வழங்கி கௌரவிக்க உள்ளோம்.

## வெளிவாரி மதிப்பீடு - 01.11.2011

### பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி

01.11.2011 அன்று வலிகாமம் கல்வி வலயத்தால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி – வெளிவாரி மதிப்பீட்டில் 75 புள்ளிகளை எமது பாடசாலை பெற்றுக்கொண்டது. இது பாடசாலை இன்று பல்வேறு துறைகளிலும் மிக உயர்ந்த அடைவுமட்டத்தில் உள்ளமையைக் காட்டுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை நிர்வாகம்

எமது பாடசாலையின் நிர்வாகம் திறம்பட நடைபெறுவதற்கு சகலவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கும் அன்பிற்கும் மதிப்பிற்க்குமுரிய உபஅதிபர் ,ஆசிரியர்கள்,கல்விசாரா ஊழியர்கள் தமது கடமைகளை செவ்வனே ஆற்றி வருகின்றார்கள். இவர்களின் தன்னலமற்ற பணிமேலும் சிறப்படைய வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக. எமது பாடசாலைக்கு யா/இணுவில் இந்துக் கல்லூரியிலிருந்து திருமதி.யமுனாலிங்கேஸ்வரனும் யா/இணுவில் மத்திய கல்லூரியில் இருந்து திருமதி. வினோதா தயாபரனும் மாற்றலாகி வந்துள்ளனர். மாற்றலாகி எமது பாடசாலைக்கு வந்த ஆசிரியர்களை மனமகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். தற்காலிக இணைப்பில் எமது பாடசாலைக்கு திருமதி.ஜீவப்பிரியா சுபாகரசர்மா, திருமதி.சுதாயினிகிருஸ்ணா ஆகியோர்கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர். இவர்களையும் மனமகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

எமது பாடசாலையில் 7 ஆண்டுகள் சேவையாற்றி மேன்மைதங்கிய ஜனாதிபதியின் நல்லதிபர் விருதுபெற்ற முன்னாள் அதிபர் திரு.சு.சண்முககுலகுமாரன் அவர்கள் 03.08.2011 இல் யா/இணுவில் இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். எமது பாடசாலையில் கடந்த 6 வருடங்களாக வர்த்தக ஆசிரியராகக் கடமையாற்றி யா/வட்டு இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி.தே.சிவகுமாரன் ஆசிரியை அவர்களுக்கும் கடந்த 22 ஆண்டுகளாக ஆசிரியராக, பகுதித் தலைவராக , உபஅதிபராக கடமையாற்றி யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலைக்கு இடமாற்றலாகிச் சென்ற மேன்மைதங்கிய ஜனாதிபதியின் நல்லாசிரியர் விருதுபெற்ற திருமதி.த.சிவப்பிரமம் அவர்களுக்கும், எமது பாடசாலையில் தமது கடமைகளைத் தவறாது செய்து எவ்வாறு சேவையாற்றினார்களோ அதேபோன்று தற்போதைய பாடசாலையிலும் சேவையாற்றவும் சிறந்த தேக ஆரோக்கியத்துடனும், சகலசௌபாக்கியங்களுடனும் தமது குடும்பத்தாருடன் இனிது வாழவும் வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைபாட விதான செயற்பாடுகள்

இணைபாட விதான செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை நடாத்தி வருகின்றோம். விளையாட்டுத்துறைச் செயலாளராக திருமதி.வ.செல்வறஞ்சன் ஆசிரியர் அவர்கள் கடமையாற்றினார். இவ் விளையாட்டுப் போட்டிக்கு எமது பாடசாலையில் கடமையாற்றும் சகலரும் முழுமையாக ஒத்துழைத்து பயிற்சி அளித்து வெற்றிபெறச்செய்து விளையாட்டுக்களின் மூலம் மாணவர் பெறும் அதி உன்னத ஆற்றல்களை விருத்திசெய்துள்ளனர். அவ்வாறே கோட்டமட்ட வலயமட்ட போட்டிகளுக்கும் தமது ஊக்குவிப்பை வழங்கிச் செயற்படுகின்றனர்.

## உதைபந்தாட்டம் 2011

எமது பாடசாலையின் 16 வயதுப் பிரிவு,13 வயதுப் பிரிவு ஆகிய இரு அணிகள் உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொண்டன. இவ் அணிகள் கோட்ட மட்டத்தில் விளையாடிப் பல வெற்றிகளை ஈட்டின. திரு.ச.தயானந்தன் ஆசிரியர் அவர்கள் இத்துறைக்குப் பொறுப்பாக இருந்து வழிநடத்தி வருகின்றார். இவ் விளையாட்டுத் துறை மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

## உடற்பயிற்சி அணி - 2012

2012 ஆம் ஆண்டுக்கான உடற்பயிற்சி அணிகளுக்கு எமது பாடசாலையில் பயிற்சிகள்வழங்கப்பட்டு வருகின்றன.ஆண்கள் உடற்பயிற்சிஅணிக்கு திரு.சி.கணேசகுமார், திரு.ச.தயானந்தன் ஆசிரியர்கள் பயிற்சி அளித்து வருகின்றனர்.பெண்கள் உடற்பயிற்சி அணிக்கு திருமதி.சி.கருணாநிதி, திருமதி. வ.செல்வறஞ்ஜன் ஆகியோர் பயிற்சி அளித்து வருகின்றனர். தேசிய மட்டம்வரை இவ்அணிகள் சென்று வெற்றியீட்ட இந்நன்னாளில் வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைப்பந்தாட்ட அணி - 2012

2012 ஆம் ஆண்டுக்கான 15வயதின் கீழ், 17வயதின் கீழ் வலைப்பந்தாட்ட அணிகள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. திருமதி.வா.சிவநேசன், திருமதி.ப. மகேந்திரன் ஆசிரியர்கள் அதற்கான பயிற்சியை வழங்கி வருகின்றார்கள். இவ் விளையாட்டுத்துறை மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

## சிறுதோழியர் அமைப்பு

இவ் அமைப்பானது பாடசாலையில் ஆரம்பப் பிரிவு மட்டத்தில் இரு அணிகளைக் கொண்டதாக சிறப்பாக இயங்கிவருகின்றது. இதற்கு திருமதி.வா.சிவநேசன், திருமதி.சி. கருணாநிதி ஆகிய ஆசிரியர்கள் பயிற்சி அளித்துவருகின்றனர்.

## பரியோவான் முதலுதவிப்படை

இடைநிலைப்பிரிவில் 50 மாணவர்களைக் கொண்ட படையணி ஒன்று பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. திருமதி.வ. செல்வறஞ்ஜன் உபஅதிபர் அவர்கள் பொறுப்பாக இருந்து இதனை சிறப்பாக வழிநடத்திவருகின்றார். இத்துறை மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

## கணனிக் கல்வி

எமது பாடசாலயில் 10 கணனிகள் மாணவர்களின் பாவனைக்காக உள்ளன. தரம் 1– 11 வரையான மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இக் கணனிகள் கல்விச்செயற்பாட்டுக்குப் போதுமானவை அல்ல. மேலும் இச் செயற்பாட்டை வலுப்படுத்த 20 கணனிகள் தேவையாக உள்ளன. இதனைப் பூர்த்திசெய்ய பாடசாலைச் சமூகமும் நலன்விரும்பிகளும் மிக துரித நடவடிக்கை எடுத்துதவுமாறு இன்றைய நன்னாளில் கேட்டுக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றங்கள்

| அமைப்பு | பொறுப்பாசிரியர் | செயற்பாடுகள் |
|---|---|---|
| தமிழ் மன்றம் | திருமதி.இ.பாலச்சந்திரன் | தமிழ்த்தின விழா கோட்ட வலய மட்டங்களுக்கு பயிற்சி வழங்கல் |
| இந்து மாமன்றம் | செல்வி.மா.மகாலட்சுமி | வாணி விழா சமய நிகழ்ச்சிகள் நடாத்தல், சமய அறிவுப் போட்டிக்குத் தயார் செய்தல் |
| கணித மன்றம் | திருமதி.ப.மகேந்திரன் | கணித தின விழா புதிர்ப்போட்டிகள், கல்விச்சுற்றுலா |
| விஞ்ஞான மன்றம் | திரு.சி.கணேசகுமார் | விஞ்ஞான தினம் புதிர்ப்போட்டிகள் |
| ஆங்கில மன்றம் | திருமதி.வ.செல்வரஞ்சன் | ஆங்கில தினம் கோட்ட மட்ட வலயமட்ட போட்டிக்குத் தயார் செய்தல் , கல்விச்சுற்றுலா |
| வரலாறு புவியியல் மன்றம் | திருமதி.பு.சர்வானந்தா | கண்காட்சி, பொதுஅறிவுப் போட்டி, ஆக்கத்திறன் போட்டிகள் |
| வர்த்தக மன்றம் | செல்வி.மா.மகாலட்சுமி | வணிகப் போட்டிக்கு தயார் செய்தல் |
| கவின்கலை மன்றம் | திருமதி.ய.லிங்கேஸ்வரன், திருமதி.வி.தயாபரன் | கலைநிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்தல் |
| ஆரம்பப் பிரிவு மன்றம் | திருமதி.பா.பாலகுமாரன் திருமதி.சி.கருணாநிதி திருமதி.சா.மயூரன் | மன்றக்கூட்டம் கலைநிகழ்ச்சிகள் |
| ஆளுத்தமுகாமைத்துவ மன்றம் | திருமதி.வா.சிவநேசன் | விசேட நிகழ்ச்சிகள் ஆக்கச்செயற்பாடுகள் |
| விசேட கல்வி | திருமதி.ச.ஜெயசீலன் | விசேட நிகழ்ச்சிகள், அரங்கச் செயற்பாடுகள் |
| சுகாதார மன்றம் | செல்வி.பா.மகாலட்சுமி | சுகாதாரமேம்பாடு குறைபாடுகளைக் கண்டறிதல். |
| சித்திரக் கழகம் | திரு.சி.தயானந்தன் | சித்திரப் போட்டி, சித்திர ஆக்கம், கலைநிகழ்ச்சிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம்

நல்ல நூல்கள் நாட்டின் பெறற்கரிய பொக்கிசங்கள் என்பதற்கிணங்க, அந்நூல்களை வாசிப்பவர்கள் அவர்களை அறியாமலேயே அறிஞர்கள் ஆகின்றனர். இந்த வகையில் எமது பாடசாலை நூலகம் மாணவர்களுக்கு உன்னதமான சேவையை வழங்கி வருகின்றது. திருமதி.வி.தயாபரன் ஆசிரியர் அவர்கள் இதற்குப் பொறுப்பாக இருந்து வழிநடத்தி வருகின்றார். தமிழ் நூல்கள் 270, ஆங்கில நூல்கள் 47,சிங்கள நூல்கள் 45 உள்ளன. உதயன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளை ஆசிரியர் கழகம் வழங்கிவருகின்றது. அன்றாடம் நிகழும் நிகழ்வினையும் பொது அறிவினையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ள வழியேற்படுகின்றது. நூலகப் பாடவேளை தவிர ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்காகவும் தேடலுக்காகவும் மாணவர்கள் நூல்களை வீடுகளுக்கு எடுத்துச்சென்று வாசிப்பது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

## உலக உணவுத்திட்டம்

2006 நவம்பர் மாதத்தில் இருந்து இலங்கை அரசும் உலகஉணவுத்திட்டமும் இணைந்து கல்விக்கான ஊட்டல் நிகழ்ச்சித்திட்டமாக இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன்பலனாக எமது பாடசாலை மாணவர்கள் சிறந்த சத்துணவைப்பெற்று உடல்நல ஆரோக்கியமானவர்களாக வளர்ந்து வருகின்றனர். இதற்குத் தொடர்ந்தும் பழையமாணவர் சங்கத்திடமிருந்து உதவிகளை எதிர்பார்க்கின்றேன். இதற்கு உதவி வழங்கிவரும் தாவடியூர் கனடா மக்கள் ஒன்றியத்தினருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை உயர்மட்ட கல்விச் செயற்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு (ESDFP)

ஆசிரியர் அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பம் - இடைநிலை, மாணவர் அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பம் - இடைநிலை, நுகர்பொருளும் திருத்தமும் ஆரம்பம் - இடைநிலை, N.S.D.G. ஆகியவற்றுக்காக 2011 இல் நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ளன. தகுந்த முறையில் பயன்படுத்தப்பட்ட இந்நிதி மூலம் மாணவர்களும் ஆசிரியர்களும் பல விதமான அனுபவங்களையும் புத்தாக்க மிளிர்வுகளையும் பெற்றுள்ளமை கண்கூடு.

## மின்மணி அன்பளிப்பு

பழைய மாணவன் திரு.அ.மயூரன் சமுர்த்தி அலுவலர் அவர்கள் 19.09.2011 அன்று ரூபா 5345.00 பெறுமதியான மின்மணி ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு எனது பாராட்டுக்கள்.

## கட்டாயக் கல்விக்குழு

கட்டாயக் கல்விக் குழுக்கூட்டம் மாதாந்தம் நடைபெறுகின்றது. புாடசாலைக்கு சமூகம் அளிக்காத பாடசாலை செல்லாத மாணவர்களைத் தேடியறிந்து மீண்டும் கல்வியில் இணைக்கும் நடவடிக்கைகளில் இக் குழு ஈடுபட்டுவருகின்றது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பான்ட் வாத்தியக்குழு

03.10.2011 இல் ஆரம்பப்பிரிவு இடைநிலைப்பிரிவுகளுக்கான பான்ட் வாத்திய உபகரணங்கள் பழைய மாணவர்களினாலும் நலன்விரும்பிகளினாலும்பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினாலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. 05.10.2011 இல் நடந்த ஆசிரியர் தின விழாவில் முதன்முறையாக பான்ட் வாத்திய இசையுடன் தாவடி அம்பலவாணவேத விநாயகர் ஆலயத்தில் இருந்து அதிபர், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினராலும் பழைய மாணவர் சங்கத்தினராலும் பாடசாலையின் பரமு வைத்தியர் கேட்போர் கூடத்திற்கு அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**ஆரம்பப்பிரிவு பான்ட் வாத்திய உபகரண அன்பளிப்புச் செய்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் நலன்புரிக்கழகம் | - | ரூபா 20 000.00 |
| திரு.செ.திருநாவுக்கரசு (ராசு – பிரபல வர்த்தகர்) | - | ரூபா 20 000.00 |

**இடைநிலைப்பிரிவு பான்ட் வாத்திய உபகரண அன்பளிப்புச் செய்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| தாவடிவடபத்திர காளி கோயில் தேவஸ்தானம் | ரூபா | 10 000.00 |
| திரு.அ.செந்தில்குமரன் (புதிவாளர்) | ரூபா | 20 000.00 |
| திரு.செ.அன்னலிங்கம் ஞாபகார்த்தம் திருமதி. ச.கலாமதி (திரு. மு.சண்முகராசா ஞாபகார்த்தம்) | ரூபா | 20 000.00 |
| திருமதி.பத்மாவதி தியாகலிங்கம் (ஆசிரியை) | ரூபா | 7 500.00 |
| Dr. பொ. பேரானந்தம் | ரூபா | 7 400.00 |
| திருமதி.சாரதா பாலசுப்பிரமணியம் (ஆசிரியை) | ரூபா | 5 000.00 |
| செல்வி.B.கெங்கா (ஆசிரியை) | ரூபா | 5 000.00 |
| திரு.செ. பரமநாதன் | ரூபா | 500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இச் சங்கம் பாடசாலை அபிவிருத்தி கருதி பெரும் பங்களிப்புச் செய்யும் அமைப்பாக அதிபரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது. புாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு பங்களிப்புக்களையும் அன்பளிப்புக்களையும் நல்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## ஆசிரியர் நலன்புரிக்கழகம்

எமது பாடசாலையின் ஆசிரியர் கழகமானது பாடசாலையில் சேவைபுரியும் ஆசிரியர் குடும்பங்களின் சகல நிகழ்வுகளிலும் நலனோம்பல்களிலும் கழக அங்கத்தவர்கள் முழுமையாகப் பங்குபற்றித் தமது ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் வழங்கிவருகின்றனர். அத்துடன் புதிதாகக்கடமைக்கு வரும் ஆசிரியர்களை உவகையுடன் அங்கத்தவராக இணைத்து மகிழ்கின்றது. தமது தேவைகள் கருதி மாற்றலாகிச்செல்பவர்களுக்கும் ஓய்வுபெற்றுச் செல்பவர்களுக்கும் பிரிவுபசாரமும் நினைவுப்பரிசில்களும் வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலையின் பௌதீக ,மனிதவள விருத்திக்குப் பாடசாலை எங்களுடையது என்ற உணர்வுடன் பழைய மாணவர் சங்கமானது ஏனைய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களுக்கு முன்னுதாரணமாகப் பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. இவ் உதவிகளினால் பாடசாலை மாணவர்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. பழைய மாணவர் சங்கத்தினூடாகத் தாவடி மக்கள் ஒன்றியம் கனடா பல உதவிகளை வழங்கி வருவது எமக்கு மிக மனமகிழ்வைத்தருகின்றது. பழைய மாணவர் சங்க உறுப்பினர்களாகப் பின்வருவோர் செயற்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.நா.சிவனேசன் - தலைவர் / அதிபர்
திரு.க.தேவராசா - உபதலைவர்
திரு.மா.சண்முகரத்தினம் - பொருளாளர்
திரு. ந.லோகேஸ்வரன் - செயலாளர்
திரு.மு.மாசிலாமணி
திரு.இ.சரவணபவன்
திரு. க. அருட்செல்வம்
திரு. சு.சுஜீபன்

## பாடசாலை வளர்ச்சிக்கு இன்னும் தேவையானவை

- விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள காணிகள் கொள்வனவு
- எமது பாடசாலைக்குச் சொந்தமான மிகப்பெரிய விளையாட்டு மைதானம்.
- வசதியான நூல்நிலையமும் ஆயிரக்கணக்கான புதிய நூல்களும்.
- 20 நவீன கணனிகள்
- வாகனத் தரிப்பிடம் 10' X 60'
- ரூபா இருபது இலட்சம் - பாடசாலைக்கு மாதாந்த வருமானம் தரக்கூடிய நிலையான வைப்பு - நானாவித செலவுகளுக்காக
- பாடசாலையின் முற்றத்திற்கு மண்நிரப்புதல்
- பாடசாலையின் சுற்றுமதில்களை பூசிப்பாதுகாத்தலும் சித்திரங்களை வரைதலும்
- ஆரம்பப்பிரிவில் அதிகளவு மாணவர்களைச் சேர்த்தல்
- மாணவர்களுக்கு முறையான சிங்கள பாடம் கற்பித்தல் - வருகை தரும் ஆசிரியர் ஒருவரை மாலைவேளை வகுப்பிற்கு அமர்த்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியும் நிறைவும்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு துணையாக நிற்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கு சிரம் தாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்றைய நன்னாளில் எமது அழைப்பை ஏற்று சிரமம்பாராது தனது வேலைகளையெல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு அன்போடு வருகைதந்த விருந்தினர்களுக்கும், ஐக்கிய அமெரிக்காவில் இருந்து தனது தந்தையார் அமரர் தா.வேலாயுதபிள்ளை ஞாபகார்த்தமாக மகன் வே.கணேஸ்வரா B.Sc.(Eng) பொறியியலாளர் அவர்கள் முழு நிதியையும் வழங்கி இப் பரிசளிப்பு விழாவினை நடாத்துவதையிட்டு அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பாடசாலையின் மனிதவளம், பௌதீகவளம் ஆகியவற்றை மேம்படுத்தி மாணவர்களின் கல்வி அடைவுமட்டம் சிறந்த முறையில் வளர்ச்சியடைய அயராது உழைத்து வரும் வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு.ஆ.இராஜேந்திரன் அவர்களுக்கும், எமக்குப் பல்வேறு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி பாடசாலை திறம்பட இயங்க வழிகாட்டிவரும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு. சு.சுந்தரசிவம் அவர்களுக்கும், எமது பாடசாலை வளர்ச்சியில் ஈடுபாடு கொண்டு உழைத்துவரும் உடுவில் கல்விக் கோட்டத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு.செ.குபேரநாதன் அவர்களுக்கும், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இந்த நல்ல நாளிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தாவடிக் கிராமத்திற்கே உரிய எமது பாடசாலை ஆயிரம் மாணவர்களைக் கொண்ட 1AB பாடசாலையாக, யா/தாவடி இந்துக்கல்லூரி என்ற பெயரில் குறுகியகாலத்தில் மாறவேண்டும் என்ற உயரிய எண்ணத்துடனும், அன்பான வேண்டுகோளுடனும், இதற்காக நாம் அனைவரும் மிகக் கடுமையாக உழைப்போம் என உறுதி பூண்டு எனது பரிசளிப்பு விழா உரையை நிறைவு செய்கின்றேன்.

**நன்றி**

**வணக்கம்**

*திரு.நா.சிவநேசன் (அதிபர்)*
*யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை*
*தாவடி*
*கொக்குவில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை ஆளணியினர்

01. திரு.நா.சிவநேசன் (அதிபர்) M.Ed,B.A.Dip.in.Edu(Merit) ,S.L.P.S
02. திருமதி.வ.செல்வறஞ்ஜன் (உபஅதிபர்) Eng.Trd.SLTS 2-II
03. திருமதி.இ.பாலச்சந்திரன் B.A, Dip.in.Edu. SLTS 1
04. திரு.சி.கணேசகுமார் Science.Trd.SLTS 2 – I
05. திருமதி.ரா.பகீரதன் Home Science.Trd.SLTS 2 – I
06. திரு.ச.தயானந்தன் Art.Trd.SLTS 2- I
07. திருமதி.ப.மகேந்திரன் Maths. Trd,B.A.Dip.in.Edu.(merit) SLTS – 1
08. திருமதி.வா.சிவநேசன் B.A.Dip.in.Edu.(merit) SLTS 2- I
09. திருமதி.ச.ஜெயசீலன் Primary Trd. SLTS 2- II
10. திருமதி.பு.சர்வானந்தா B.A.(Hons) Dip.in.Edu, M.Phil SLTS – 1
11. செல்வி.மா.மகாலட்சுமி H.N.D.C. Dip.in.Edu SLTS 2-II
12. திருமதி.பா.பாலகுமாரன் B.A.Dip.in.Edu.SLTS 2- I
13. திரு.இ.ஐங்கரன் Agriculture food & Tecno –Trd.SLTS 2-II
14. திருமதி.சி.கருணாநிதி Primary Trd. SLTS 3- I
15. திருமதி.சா.மயூரன் B.B.A.(Hons) SLTS 3 – I
16. திருமதி.ய.லிங்கேஸ்வரன் B.F.A. Music SLTS 3-I
17. திருமதி.வி.தயாபரன் B.F.A. Dance SLTS 3-I

## கல்விசாரா ஊழியர்

18. திரு.வி.கோகுலன் B.Com.

## தற்காலிக இணைப்பு ஆசிரியர்

19. திருமதி.ஜீ.சுபாகரசர்மா B.F.A Dance, SLTS3-I
20. திருமதி.சு.கிருஸ்ணா National Dip.in.Edu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**19.09.2011 மின்மணி அன்பளிப்பு**

**திரு.அ.மயூரன் (பழையமாணவர்)**



**2011 ஆம் ஆண்டு மாணவ முதல்வர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13 வயதுப்பிரிவு உதைபந்தாட்ட அணி 2011




16 வயதுப்பிரிவு உதைபந்தாட்ட அணி 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2011 ஆம் ஆண்டு பாண்ட் வாத்திய அணி



2012 ஆம் ஆண்டு பெண்கள் உடற்பயிற்சி அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2012 ஆம் ஆண்டிற்கான ஆண்கள் உடற்பயிற்சி அணி



15வயதின் கீழ்ப் பெண்கள் வலைப்பந்தாட்ட அணி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



17 வயதின் கீழ்ப் பெண்கள் வலைப்பந்தாட்ட அணி 2012



பாடசாலையின் சரஸ்வதித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011 பரிசு பெறுவோர் விபரம்
## (2010 பெறுபேற்றின் அடிப்படையில்)

**தரம் 01**

வகுப்பு நிலை :- 01. சி. கம்சாளினி
02. ஆ. சஜிபனா
03. சி. தரணிகா
04. ஸ்ரீ. வேணுசா
05. ந. சரண்ராஜ்

கி . கஜீபன் :- கோலம் போடுதல் குடும்பமட்டம் -2ம் இடம்

**தரம் 02**

வகுப்பு நிலை :- 01. சி.தனுஜன்
02. கு. நிர்சன்
03. ஸ்ரீ .பிரியங்கா
04. சி. தட்சாயினி
05. ர.டினோஜன்

**தரம் 03**

வகுப்பு நிலை :- 01. மு. கவியரசன்
02. சி. ஜிந்துஜா
03. ர. சுஜிதன் (வாய்பாடு மனனம் குடும்பமட்டம் -2ம் இடம்)
04. மு.கலையரசன்
05. ஸ்ரீ.ரிஷவர்மன்

பி.சாரங்கன் :- ஆங்கில தனிப்பாடல் குடும்ப மட்டம் 2ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 04**

வகுப்பு நிலை :- 01. சி. வேணுசன்
02. உ.பபிதா :- ஆங்கில தனிப்பாடல் குடும்ப மட்டம் 3ம் இடம்
03. சு.விஜிதா
04. சு. தமிழினி
05. ஜெ.கஜீந்தினி

**தரம் 05**

வகுப்பு நிலை :- 01. ஆ. கார்த்திகா
02. பு. கோபிகா
03. சி.பிறின்சிகா
04. க.அஜந்தா
05. சி. பூஜா

பா.பிரியங்கா :- பெரிய பந்தெறிதல் கோட்ட மட்டம் – 1ம் இடம்

## கல்வி அமைச்சின் புலமைப்பரிசில் பரீட்சைப் புள்ளித்திட்டத்தின் அடிப்படையில் பாராட்டுப் பெறுவோர்

01. கார்த்திகா ஆனந்தராசா
02. பிறின்சிகா சிவசுப்பிரமணியம்
03. அஜந்தா கஜேந்திரன்
04. ராகுலன் தேனுஜன்
05. சற்குணராசா நிகேந்திரன்
06. பூஜா சிவனேசன்
07. கோபிகா புவனேந்தன்
08. கிரிதரன் லக்சன்
09. மிதுசங்கா ஶ்ரீதரன்
10. டிலானி ரவிச்சந்திரன்
11. அகல்யா ராஜலிங்கம்
12. ஜெனோமி ஜெயக்குமார்
13. சாலினி உதயகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் :- 06**

வகுப்பு நிலை :- 01. சு. கமிலன் (சமூக விஞ்ஞானப்போட்டி கோட்ட மட்டம் 2ம் இடம், கணித புதிர்ப்போட்டி கோட்டமட்டம் 2ம் இடம்
பாடம் :- சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சுகாதாரம், வரலாறு, புவியியல், வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும்)

02. ந. ரேணுஜன் (சித்திரம்)

03. க. சியாமளா

04. கு. கஸ்தூரி (சங்கீதம்)

**தரம் :- 07**

வகுப்பு நிலை :- 01. ச.அஜிந்தன் (சமயம், விஞ்ஞானம், சுகாதாரம், வரலாறு, புவியியல்)

02. வ. தக்சனா

03.ஜெ.ஜெஸ்மி (தமிழ், சங்கீதம், குடியுரிமை, தமிழ்த்தினப் போட்டி, கட்டுரை வரைதல் கோட்டமட்டம் 2ம் இடம்)

பா.மாதங்கி :- கணிதம், ஆங்கிலம், சித்திரம்

ச.திவ்யராம் :- 100m ஓட்டம் கோட்டமட்டம் 1ம் இடம், நீளம் பாய்தல் கோட்டமட்டம் 1ம் இடம்

க. உமைப்பிரியா :- சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 3ம் இடம்)

**தரம் :- 08**

வகுப்புநிலை :- 01.அ.சிந்துஜா சமயம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சித்திரம், சுகாதாரம், வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி, தமிழ், சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 1ம் இடம், வலயம் 3ம் இடம், ஆங்கில கட்டுரை வரைதல் கோட்ட மட்டம் 2ம் இடம், விஞ்ஞான வினாடிவினா போட்டி கோட்ட மட்டம் 1ம் இடம்

:- 02.கி.சிந்துஜா

:- 03.ம.விஜிதன்

க.லக்சாயினி :- சங்கீதம்

ந.சாலினி :- சர்வதேச முதியோர் தின கவிதைகோட்ட மட்டம் 1ம் இடம்

சு.வினோஜினி :- சஞ்சிகை ஆக்கம் கோட்டமட்டம் 1ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரம் 09**

வகுப்புநிலை :- 01.க.தனிஸ்ரா சமயம், கணிதம், சுகாதாரம், வரலாறு, சங்கீதம், குடியுரிமைகல்வி, பிரயோகத்தொழில்நுட்பம்
தமிழ்த்தினப் பேச்சு கோட்டமட்டம் 2ம் இடம்
சமூகவிஞ்ஞானம் கோட்டமட்டம் 2ம்இடம்

02.செ.கஜானி

தமிழ், ஆங்கிலம், புவியியல்

03.சி.ரம்யா :- விஞ்ஞானம்

செ.சஜீபன் :- சித்திரம்

**தரம் 10**

வகுப்பு நிலை :- 01.கி.ஜனார்த்தனன்
சமயம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு,விவசாயம்
விஞ்ஞான வினாடிவினாபோட்டி கோட்ட மடடம் 3ம் இடம்
சமூகவிஞ்ஞானம் கோட்டமட்டம் 1ம் இடம்
குறுநாடக ஆக்கம் தமிழ்த்தினம் கோட்டமட்டம் 2ம் இடம்

02.சு. லஜிதா

கணிதம், மனைப்பொருளியல், வர்த்தகம்

03.த.கோஜிகா

சர்வதேச முதியோர்தின கவிதைப்போட்டி கோட்ட மட்டம் 3ம் இடம்

இ.புவிராஜ் :- சித்திரம்
சி.திசாளினி :- சங்கீதம், குடியுரிமைக்கல்வி
சு.சுலக்சன் :- சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 2ம் இடம்
சு.வினோஜன் :- கணிதபுதிர்ப்போட்டி கோட்ட மட்டம் 3ம் இடம்
வ.சொபிசா :- சஞ்சிகை ஆக்கம் கோட்ட மட்டம் 1ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றோர்(2010)

| | | |
|---|---|---|
| 01. | ஜெயரட்ணம்துவாரகன் | 3A 2B 3C 1S |
| | சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 2ம் இடம் | |
| 02. | உருத்திரகுமார் லதுசன் | 1A 3B 4C 1S |
| 03. | ஜீவிதா நிர்மலகாந்தன் | 1A 2B 4C 2S |
| 04. | யாழினி கிரிதரன் | 1A 2B 3C 2S |
| 05. | செல்வராஜா கஜானனன் | 1A 3B 2S |
| 06. | திவ்யா ரவீந்திரகுமார் | 1A 1B 3C 3S |
| 07. | லங்காகுமார் நிரோசன் | 1A 3C 4S |
| 08. | மார்க்கண்டு ஜனகராஜ் | 3A 2B 3C |
| 09. | குணரட்ணம் தனுசன் | 2B 3C 3S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கீதம்

**இராகம் :- ஹம்சத்வனி** **தாளம் :- ஆதி**

### பல்லவி

துதிபாடித் துதித்திடுவோம் - எங்கள்

தாவடி இந்துமா தேவியைப் போற்றியே....... !! துதி....

### அனுபல்லவி

கதியெமக் கிங்கே காட்டும்
கல்விக் கலைநிதம் ஊட்டும்
கல்வித்தெய்வமாய் நாளும்
கவினுற விளங்கும் தாயை....துதி

### சரணம்

நதியெனப் பாயும் நன்னெறி சீலமும்
முதியோர் மொழிந்த மூதுரை ஞானமும்
பொதிய மலையோன் புகன்ற செந்தமிழும்
மதிநலமாய்ச் சேர்ந்திட வரமருளுந்தேவியை....!!துதி....

உயர்நீதி தன்னில் உயர்ந்தே போற்றும்
முயற்சியும் ஊக்கமும் மேலாந் துணிவும்
வியன்பெறு வாழ்வும் வளமா யீட்டிட
"உயர்நெறி வழியுய்மின்" என்றோதுந் தேவியை ....!!துதி....

பல்கலைக் கல்வியும் பல்தொழில் வளமும்
நல்வித்தை யாயிங்கு நல்லறிவில் நாளும்
நல்லா சிரியர் நேர்வழியில் நல்கவே
தொல்புகழ்(த்) தாவடி இந்துமா தேவியை ...!!துதி ....

**பாடல் ஆக்கம் :- அநு.வை.நாகராஜன் - அதிபர்**

**இசையமைப்பு:- இணுவையூர் பிரம்மஸ்ரீ.ந.வீரமணிஐயர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா நிதி அன்பளிப்பு



## அமரர் தா.வேலாயுதபிள்ளை அவர்களின் ஞாபகார்த்தம்

தாவடியூர் அமரர் தா. வேலாயுதபிள்ளை அவர்களின் மகன் பொறியியலாளர் வே.கணேஸ்வரா (BSC, Eng கலிபோர்ணியா, ஐக்கிய அமெரிக்கா) அவர்களால் இப்பரிசளிப்பு விழாவிற்கான நிதி வழங்கப்படுகிறது. இவர் தாவடியூரின் புகழ்பூத்த கல்விமான்களுள் ஒருவராகக் காணப்படுவதுடன் கலைத்துறையில் பேரார்வம் கொண்ட வருமாவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அதிவிசேட சித்திபெற்று புலமைப் பரிசில் மூலம் ஐக்கிய அமெரிக்கா சென்றார். இவர் இப்பரிசளிப்பு விழா நிதியை ஆண்டு தோறும் எமது பாடசாலைக்கு வழங்குவதையிட்டு நாம் பேருவகை அடைவதுடன் இவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நன்றியுடன் பாடசாலைச் சமூகம்

Virus Graphics 0212241815

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org